11th March 1959]

மற்றொரு நிலத்திற்குப் பூச்சி போய் விடுகிறது. அந்த நிலைமையின் காரணமாக ஒரே சமயத்தில் எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்துகளை அடிக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இம்மாதிரி எல்லா நிலங்களுக்கும் அரசாங்கமே உபயோகிக்கக்கூடிய திட்டம் இல்லை. இப்பொழுது பூச்சி மருந்துகள் பாதி விலைக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்ற யோசனை இல்லை. அம்மாதிரியான கோரிக்கையும் வரவில்லை.

Pest attack on betel vines

* 710 *Q.*—**Sri M. KALYANASUNDARAM :** Will the Hon. the Minister for Home be pleased to place on the table of the House a statement detailing the progress made in investigating the remedial measures for betel vines against pests in the State and the total amount spent during the current year for the investigation?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The answer[a] is placed on the table of the House.

Sri M. KALYANASUNDARAM : எவ்வளவு வருஷ காலமாக இந்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இன்னும் எவ்வளவு நாளைக்கு இந்த ஆராய்ச்சி நடைபெறும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 1956–57-ல் தொடங்கி இன்னும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இது ஒரு கஷ்டமான ஆராய்ச்சி. மூன்று வருஷ காலமாக இது ஆராய்ச்சி செய்யப்பட்டு இப்பொழுது முடியும் தருவாயில் இருக்கிறது. சில முடிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

Sri K. ANBAZHAGAN : பாண்டமங்கலம் வெற்றிலைக் கொடிக்காலில் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வரும்போது அங்கே பூச்சி விழுந்து எல்லாம் காய்ந்துபோய்விட்டது. அந்த ஆராய்ச்சி பண்ணையிலிருந்து நிறைய பூச்சி கிளம்பி அந்த வட்டாரம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதையெல்லாம் தவிர்ப்பதற்குத்தான் ஆராய்ச்சி நடைபெறுகிறது. அங்கே பூச்சி வரவில்லை என்றால் ஆராய்ச்சிபண்ணி பயன் இல்லை (சிரிப்பு). பூச்சி இல்லையானால் ஆராய்ச்சி பண்ணுவது பயன் இல்லாமல் போய்விடும். பூச்சி வருவது நல்லதுதான்.

Sri A. VEDARATHNAM : ஆராய்ச்சியின் பயனாக சில முடிவுகள் ஏற்பட்டிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் கூறினார். அந்த முடிவுகள் என்ன என்பதை அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : போர்டோ மிக்ஸ்சர் தெளிப்பதால் நல்ல பலன் கிடைக்கிறது என்பது ஒரு முடிவு. பச்சைக் கொடி, கற்பூரக்கொடி போன்றவைகள்தான் இப்படிப்பட்ட வியாதிகளுக்கு ஆளாகின்றன என்பது மற்றொரு முடிவு.

Dispensary at Kulasekaram

* 711 *Q.*—**Sri T. T. DANIEL :** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have a scheme to raise the dispensary at Kulasekaram (Kanyakumari district) to the status of a hospital; and

---

[a] Printed as Appendix VII on pages 97 infra.